IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
O.S.No. 45/2018
Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : சதாசிவம் | Caste | : - |
| Father's Name | : மார்கபந்து | Calling | : - |
| Village | : சித்தூர் | Religion | : இந்து |
| Taluk | : - | Age | : 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9 day of July, 2019.

Chief Examination

நான் இந்த வழக்கின் வாதி. என்னை வா.சா.1 ஆக முதல் விசாரணை செய்கிறேன். இன்று எனது நிரூபணவாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். 20.3.1951-ம் தேதியிட்டு கிருஷ்ணப்ப கவுண்டர் குமாரர்கள் மார்கபந்துகவுண்டர், நடராஜகவுண்டர் ஆகிய இருவரும் எழுதிக்கொண்ட குடும்ப ஏற்பாட்டு ஆவணத்தின் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ1 ஆகும் ( பிரதிவாதி தரப்பில் இந்த ஆவணம் சான்றிட்ட நகலாக இருப்பதால் குறியீடு செய்வதற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது எனவே ஆட்சேபணையோடு குறியீடு செய்யப்படுகிறது). 1.1.1994ம் தேதி கிருஷ்ணப்ப கவுண்டர் குமாரர்கள் மார்கபந்துகவுண்டர் அவரது மகன்கள் சதாசிவன், நீலமேகன் மற்றும் கிருஷ்ணன் ஆகிய நால்வரும் எழுதிக்கொண்ட குடும்ப ஏற்பாட்டு ஆவணத்தின் சான்றிட்ட நகலின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ2 ஆகும். 15.4.1996 தேதியிட்டு நான் பரசுராமனுக்கு எழுதிக்கொடுத்த ஈடுகடன் அடைமான ஆவணத்தின் அசல் வா.சா.ஆ3 ஆகும். 13. 2.2007ம் தேதியிட்ட அசல் வழக்கு எண்.84/2000 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் நகல் வா.சா.ஆ 4 ஆகும். 5.1.1998 தேதியிட்டு நீலமேகம் மற்றும் நான் ஆகியோர் எழுதிக்கொண்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ 5 ஆகும். 2.1.2012 தேதியிட்டு அசல் வழக்கு எண். 53/2008 இந்நீதிமன்றம் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ6

ஆகும். 6.2.2014 தேதியிட்டு அசல் வழக்கு எண். 96/2011-ன் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ7 ஆகும். தாவாபடி தீர்ப்பாகவேண்டும்.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPAD I.